# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.89/2021

## அ.சா. 14 (LW 18 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சோபனா | **தொழில்** | |
| **கணவர் பெயர்** | இளையராஜா | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **08.11.2023** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 2, 4 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது நிலக்கோட்டை, சித்தர்கள் நத்தம் பகுதியில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.11.2016ம் தேதி நான் சிலுக்குவார்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது, நிலக்கோட்டை காவல் ஆய்வாளர் தொலைபேசி வாயிலாக அழைத்ததன் பேரில் நான் சிலுக்குவார்பட்டி பேருந்து நிலையத்திற்கு சென்றேன். அங்கு ஆய்வாளர் வழக்கு சம்பந்தமாக சில நபர்களை விசாரிக்க வேண்டும் என்றும், அதில் நாங்கள் சாட்சியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில் நானும், கிராம உதவியாளர் சுப்பிரமணியனும் சென்றோம். அப்போது ஆய்வாளர் சிலரை விசாரித்தார். முத்துப்பாண்டி என்பவரை இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்த கொலை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார். அவர் எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவருடைய நண்பர்களான முரளிதரன் மற்றும் இருவர் சேர்ந்து முத்துராஜா என்பவரை 25.09.2016ம் தேதி கொடைரோடு அருகில் உள்ள மெட்ரோவேலியில் கொலை செய்ததாக சொன்னார். அதில் நானும், கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர் அவர்கள் கொடைரோடிற்கு அருகில் உள்ள மெட்ரோவேலிக்கு அழைத்து சென்று சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார். அந்தஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்த முத்துப்பாண்டி என்பவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – செய்யப்படவில்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.11.08 17:47:00 +0530

Additional District Judge,

Dindigul.